03.10.2024

அ.வ.எண்.529/2017

வாசா.2 விவேக்

2 முதல் 12 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். மேற்படி எதிர்வழக்குரையை மறுத்து இந்த வழக்கில் நான் என்னுடைய பதிலுரையையோ அல்லது சாட்சி வாக்குமூலத்திலோ மறுப்பு எதிர்ப்பு தெரிவித்தோ சொல்லியுள்ளோனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பதிலுரை தாக்கல் செய்யாமல் மேற்படி சொல்லியுள்ள சங்கதிகளை மறுப்பு சொல்லாமல் தற்பொழுது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ.2 ஆவணம் கந்தசாமி கவுண்டருக்கு நஞ்சையன் எழுதிக்கொடுத்தது என்றால் ஆமாம். அதில் நஞ்சப்பகவுண்டர் அல்லது நஞ்சையன் கவுண்டரோ பெயர் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். ஆனால் நஞ்சையன் , நஞ்சப்பகவுண்டர், நஞ்சையகவுண்டர் ஆகியோர் மூன்று பெயர்களும் ஒரே நபரைதான் குறிக்கும். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி வாசாஆ.2 ஆவணத்திலுள்ள நபர்களுக்கும் நான் குறிப்பிடும் நபர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் வாசாஆ.2 ஆவணத்தில் எனக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்று சொத்தின் உரிமையானது சொல்லப்பட்டது தவிர 1950 ஆண்டு ஆவண எண்.1270 ன்கீழ் பாத்தியப்பட்டது என்று எழுதப்படவில்லை என்றால் ஆமாம். வாசாஆ.3 ஆவணத்திலும் சுப்பண்ணகவுண்டர் கந்தசாமி கவுண்டருக்கு எழுதிக்கொடுத்தாக உள்ளதாக என்றால் ஆமாம். அதிலும் சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது தவிர 1950 ஆண்டு ஆவண எண். 1270 ன்கீழ் பாத்தியப்பட்டதாக எழுதப்படவில்லை என்றால் ஆமாம். வாசாஆ.2 மற்றும் 3 ன் அசல் எங்களிடம் தான் உள்ளது. மேற்படி ஆவணத்தின் அசல் என்வசம் இல்லாததால் இல்லை என்றும் நான் வழக்கிற்காக என்வசம் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ.2 மற்றும் 3 ஆவணங்களின் சொத்தின் சரிபாதி என்று குறிப்பிட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாசாஆ.2 மற்றும் 3 ஆவணங்களின் கீழ் கந்தசாமி கவுண்டர் 4.60 ஏக்கருக்கு உரிமையாளர் என்றால் ஆமாம்.

மேற்படி கந்தசாமி கவுண்டர் சுயார்ஜிதமாக சொத்துக்களை கிரையம் பெற்றிருந்தால் அவர் அதை பாகம் பிரித்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்றால் சரியல்ல. கந்தசாமியின் 6வது மகன் பெயர் ஆறுமுகம் என்றால் அது எனக்கு தெரியாது. கந்தசாமிக்கு 6 குழந்தைகள் இருக்கும்பொழுது 6வது மகனுடன் மட்டும் பாகபிரிவினை

செய்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்றால் அவர்கள் சகோதரர்களுக்குள்தான் பாகபிரிவினை செய்துகொண்டார்கள். கந்தசாமிகவுண்டரும் , ஆறுமுகமும் சகோதரர்கள் என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணத்தில் அப்படிதான் உள்ளது. மேற்படி ஆறுமுகம் 1999 ல் திருநாவுக்கரசு என்பவருக்கு ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் கந்தசாமிகவுண்டர் மகன் ஆறுமுகம் என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாசாஆ.2 முதல் 5 வரையிலான ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

வாசாஆ.7 ஆவணத்தின்கீழ் வழக்கு சொத்தின் ஒருபகுதியை எனது தகப்பனார் 2003 ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் கந்தசாமி கவுண்டர் அவர்களுக்கு 12.4.1967 தேதியிட்ட ஆவண எண். 404/1967 ல் கிரையப்பத்திரப்படி பாத்தியப்பட்ட மேற்படியார் எந்தவித ஏற்பாடும் செய்யாமல் காலமான பின்னிட்டு எங்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி கந்தசாமி கவுண்டர் 2003 வரைவழக்கு சொத்தை எந்தவித வில்லங்கத்திற்கு உட்படுத்தாமல் இருந்துள்ளார் என்று எங்களுடைய கிரைய ஆவணத்தின்மூலம் தெரியவருவதால் அதன் அடிப்படையில் பார்க்கும்பொழுது வாசாஆ.2 முதல் வாசாஆ. 7 வரையிலான ஆவணங்கள் போலியானது என்றால் சரியல்ல.

வாசாஆ.8 கிஸ்து ரசீதுகள் ஏற்கனவே எங்களுக்கு பாத்தியப்பட்டது வழங்கப்பட்ட கிஸ்து ரசீதுகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குறித்து எனது தகப்பனாருக்கு தனி பட்டா வழங்கப்படவில்லை என்றால் ஆமாம். வாசாஆ.9 கூட்டு பட்டா என்றால் ஆமாம். வாசாஆ.10 அடங்கலானது 2002 ஆண்டின் கந்தசாமி கவுண்டர் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். எனது தகப்பனார் பெயரில் 2003 ஆண்டிற்கு பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்த 2015 ஆண்டு வரை அடங்கல் நான் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ.11 ஆவணம் பிரதிவாதிகளுக்குள் முறையாக சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது தகப்பனார் மீது 1ம் பிரதிவாதி ரங்கசாமி கோவை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 450/2011 தாக்கல் செய்த அந்த வழக்கு முழுவதுமாக விசாரணை செய்யப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே 2006 ஆண்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் செய்து பாகபிரிவினை அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை 2013 ஆண்டு 2ம் பிரதிவாதிஹயம் 1ம் பிரதிவாதி சகோதரான பாலகிருஷ்ணசாமிக்கு சொத்தை எழுதிவைத்துள்ளார் என்றால் அந்த அசல் ஆவணங்கள் 2ம் பிரதிவாதி வசம் உள்ளது

என்றால் சரியல்ல.

மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் இந்த வழக்கில் வாசாஆ.13 ஆக எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது . இந்த ஆவணத்தின் 2ம் பக்கத்தில் மேற்படி சொத்தை செட்டில்மெண்ட் செய்து சுவாதீனம் ஒப்படைத்தேன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பானுமதி, பெரியம்மாள், தங்கவேலு, வள்ளியத்தாள் ஆகியோர் சுப்பண்ண கவுண்டரின் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் வாரிசுகள் பற்றி எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக தெரியாதென பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சுப்பண்ணகவுண்டர் சொத்து ஒருபகுதி பானுமதியிடம் , மற்றொரு பகுதி சுப்பண்ணகவுண்டர் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து மணி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர் என்றால் எனக்கு தெரியும். போலியான பத்திரம் என்பதால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் ஒருபகுதியான 2.30 ஏக்கரில் இன்றுவரைம 2ம் பிரதிவாதிதான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. மீதமுள்ள 2.30 ஏக்கரின் ஒருபகுதியை பானுமதியும் மற்றொரு பகுதியை மணி என்பவரும் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல எங்கள்வசம் அனுபவம் உள்ளது. வழக்கு சொத்திற்கு பிரதிவாதிகள் மட்டும் உரிமையாளர் கள் எங்களுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லையென்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகிலுள்ள எங்களது சொத்தை வைத்து வாக்கு சொத்தை நாங்கள் அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/விவேக்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur